©
தமிழ்நாடு அரசு
2009

**கையெழுத்துத் தொடர்**

# நிதி (ஊதியப் பிரிவு)த்துறை

## அரசு ஆணை நிலை எண்.**11**, நாள் : 13—1—2009

**(மார்கழி–29. திருவள்ளுவர் ஆண்டு, 2039)**

இடைக்கால நிலுவைத் தொகை –– ஓய்வூதியதாரர்களுக்கு திருத்திய ஓய்வூதியம் / குடும்ப ஓய்வூதியம் நிர்ணயித்தல் குறித்த அலுவலர் குழுவின் பரிந்துரையினைச் செயற்படுத்துதல் முடிவடையாத நிலையில் –– இடைக்கால நிலுவைத் தொகை வழங்குதல் ––ஆணை வெளியிடப்படுகிறது.

---

படிக்கவும்:

1. அ.ஆ. நிலை எண். 358, நிதி (ஊபி)த்துறை, நாள்:20—8—2008.
2. அ.ஆ. நிலை எண். 496, நிதி (ஊபி)த்துறை, நாள்:17—11--2008.

– – – – –

**ஆணை :**

மைய அரசின் ஆறாவது ஊதியக் குழுவின் பரிந்துரைகளின் மீது மைய அரசு எடுத்துள்ள முடிவுகளின் அடிப்படையில் மாநில அரசு அலுவலர்கள் மற்றும் ஆசிரியர்கள், உள்ளாட்சி நிறுவன அலுவலர்களுக்கு திருத்திய ஊதியம் மற்றும் இதர படிகள் நிர்ணயிப்பது குறித்து ஆராய்ந்து தக்க பரிந்துரைகளை வழங்க ஒரு அலுவலர் குழு மேலே ஒன்றில் படிக்கப்பட்ட ஆணையில் அமைக்கப்பட்டது. திருத்திய ஓய்வூதியம் / குடும்ப ஓய்வூதியம் மற்றும் ஓய்வுக்கால சலுகைகள் வழங்குவது குறித்தும் பரிந்துரைக்குமாறு அக்குழு கேட்டுக் கொள்ளப்பட்டது. மேலும், இவை தொடர்பான பரிந்துரைகளை மூன்று மாத கால அவகாசத்திற்குள் அரசுக்கு சமர்ப்பிக்குமாறு அலுவலர் குழு கேட்டுக் கொள்ளப்பட்டது. பின்னர், மேலே இரண்டில் படிக்கப்பட்ட அரசாணையில் அலுவலர் குழுவின் பதவிக் காலத்தினை 19—11—2008ஆம் நாளைத் தொடர்ந்து மேலும் மூன்று மாத காலத்திற்கு நீட்டிப்பு செய்து ஆணையிடப்பட்டது.

2) அலுவலர் குழுவின் இறுதி அறிக்கை சமர்ப்பிப்பதற்கு கால அவசாசம் தேவைப்படுவதனைக் கருத்தில் கொண்டு ஓய்வூதியம் / குடும்ப ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு இடைக்கால நிலுவைத் தொகையாக **1—1—2009** அன்று அவர்கள் பெறும் ஓய்வூதியத்தின் அடிப்படையில் மூன்று மாத ஓய்வூதியம் + அகவிலை ஓய்வூதியம் + அகவிலைப்படி சேர்த்து வழங்க பரிந்துரை செய்துள்ளது. அலுவலர் குழுவின் இப்பரிந்துரையினை அரசு கவனமாக பரிசீலித்து ஏற்றுக்கொண்டு, திருத்திய ஓய்வூதியம் / குடும்ப ஓய்வூதியம் நிர்ணயித்தல் குறித்த அலுவலர் குழுவின் பரிந்துரைகள் இறுதி செய்யப்படாத நிலையில் 1—1—2009 அன்று ஓய்வூதியம் / குடும்ப ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு இடைக்கால நிலுவைத் தொகையாக **1—1—2009** அன்று அவர்கள் பெறும் ஓய்வூதியத்தின் அடிப்படையில் மூன்று மாத ஓய்வூதியம் + அகவிலை ஓய்வூதியம் + அகவிலைப்படி சேர்த்து வழங்க ஆணையிடுகிறது.

/த.பி.பா./

3) மாநில நிதி ஆதாரங்களிலிருந்து ஓய்வூதியம் வழங்குதல் குறித்த செலவு செய்யப்படும் வகையிலான ஓய்வூதியதாரர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்களைப் பொறுத்தமட்டில் இச்செலவினம் “2071. ஓய்வூதியம் மற்றும் ஏனைய ஓய்வுகால பயன்கள்” குறித்த கணக்குத் தலைப்பின் கீழ் உள்ள பெருந்தலைப்பு, துணைப் பெருந்தலைப்பு மற்றும் சிறு தலைப்புகளின் கீழ் 27. ஓய்வூதியங்கள் என்ற உள்கணக்குத் தலைப்பில் பற்று வைக்கப்பட வேண்டும். உள்ளாட்சி நிதித்தணிக்கை இயக்குநர் கணக்கு வைத்துவரும் நிதித் தொகுப்பிலிருந்து ஓய்வூதியம் குறித்த செலவு செய்யப்படும் வகையிலான உள்ளாட்சி மன்றங்களின் ஓய்வூதியதாரர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்களைப் பொறுத்தமட்டில் இந்தச்செலவு அந்தந்த நிதித்தொகுப்பிலிருந்து மேற்கொள்ளப்படும்.

4) 2008—09ஆம் ஆண்டிற்கான திருத்திய மதிப்பீடு / இறுதி திருத்திய ஒதுக்கீட்டில் தேவையான நிதி ஒதுக்கீடு செய்யப்படும். 2008—09ஆம் ஆண்டிற்கான திருத்திய மதிப்பீடு / இறுதி திருத்திய ஒதுக்கீடு / இறுதி துணை மதிப்பீட்டில் தேவையான நிதி ஒதுக்கீட்டினை எதிர்நோக்கி ஓய்வூதியதாரர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்களுக்கான இடைக்கால நிலுவைத் தொகையினை உடன் பெற்று 2009ஆம் ஆண்டு சனவரி மாத இறுதிக்குள் வழங்குமாறு அனைத்து கருவூல அலுவலர்கள் / சார்நிலை கருவூல அலுவலர்கள் / ஓய்வூதியம் வழங்கும் அலுவலர் மற்றும் சம்பந்தப்பட்ட பொதுத்துறை வங்கி அலுவலர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இச்செலவினத்தினை 2008—09ஆம் ஆண்டிற்கான திருத்திய மதிப்பீடு / இறுதி திருத்திய ஒதுக்கீடு / இறுதி துணை மதிப்பீட்டிற்கான கருத்துரு அரசுக்கு அனுப்பும்போது சேர்க்குமாறு முதன்மை மாநில கணக்காயர் (கணக்குகள் மற்றும் உரிமைத் தொகை) கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

5) மேலே கூறப்பட்டுள்ளவாறு வழங்கப்படும் இடைக்கால நிலுவைத் தொகை அலுவலர் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் பின்னர் வெளியிடப்படும் அரசாணையின்படி நிர்ணயிக்கப்படும் திருத்திய ஓய்வூதியம் / குடும்ப ஓய்வூதியத்தில் அளிக்கப்படும் நிலுவைத் தொகையில் சரிக்கட்டப்படும்.

(ஆளுநரின் ஆணைப்படி)

**கு. ஞானதேசிகன்,**
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
அனைத்து அரசுச் செயலாளர்கள்,
செயலாளர், சட்டமன்றபேரவைச் செயலகம், சென்னை–9.
ஆளுநரின் செயலகம், ராஜ்பவன், கிண்டி, சென்னை–32.
அனைத்து செயலகத் துறைகள்.
அனைத்துத் துறைத் தலைவர்கள்.
சட்டப் பேரவைச் செயலகம், சென்னை–9.
தமிழ்நாடு மாநில தகவல் ஆணையம், 378, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை–18.
முதன்மை மாநில கணக்காயர் (கணக்குகள் மற்றும் உரிமைத் தொகை),
சென்னை–18. (பெயரில்)
முதன்மை மாநில கணக்காயர் (கணக்குகள் மற்றும் உரிமைத் தொகை), சென்னை–18.
மாநில கணக்குத்துறைத் தலைவர் (தணிக்கை–I), சென்னை–18.
மாநில கணக்குத்துறைத் தலைவர் (தணிக்கை–II), சென்னை–18.
மாநில கணக்குத்துறைத் தலைவர் (சி.ஏ.பி), சென்னை–9.

.../ 3 /

பதிவாளர், உயர்நீதிமன்றம், சென்னை–104.
செயலாளர், தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம், சென்னை–2.
மாநகராட்சி ஆணையர், சென்னை/ மதுரை/ கோயம்புத்தூர்/ திருச்சிராப்பள்ளி
/சேலம் /திருநெல்வேலி/ஈரோடு/ தூத்துக்குடி/ திருப்பூர், வேலூார்.
திட்ட ஒருங்கிணைப்பாளர், உலக வங்கி உதவி பெறும் ஒருங்கிணைந்த
குழந்தை வளர்ச்சிப் பணிகள் மூன்றாவது திட்டம், சென்னை – 113.
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்/மாவட்ட நீதிபதிகள்/
முதன்மை நீதித்துறை மாஜிஸ்ரேட்டுகள்.
ஓய்வூதிய இயக்குநர், 3–வது பிளாக், டி.எம்.எஸ். வளாகம், தேனாம்பேட்டை, சென்னை–6.
ஓய்வூதியம் வழங்கும் அலுவலர், சென்னை–6.
அனைத்து சம்பள கணக்கு அலுவலர்கள்.
அனைத்து கருவூல அலுவலர்கள் / சார்நிலை கருவூல அலுவலர்கள்.
தலைமை அரசுத் துறை நிறுவனத் தணிக்கையாளர், சென்னை–2.
அனைத்து மாநிலக் கழகங்கள் / நிறுவனங்கள்.

**நகல்:**
மாண்புமிகு முதலமைச்சரின் செயலாளர், சென்னை–9.
நிதித்துறை அமைச்சரின் தனிச் செயலாளர், சென்னை–9.
தலைமைச் செயலாளரின் முதன்மை தனிச் செயலாளர், சென்னை–9.
உள்ளாட்சி நிதித் தணிக்கை இயக்குநர், சென்னை–108.
அனைத்து நகராட்சி / ஊராட்சி ஒன்றிய ஆணையர்கள்.
தலைவர், தமிழ்நாடு ஓய்வூதியர் சங்கம், டி.பி.ஐ. வளாகம், கல்லூரிச்சாலை, சென்னை–6.
தலைவர், தமிழ்நாடு தலைமைச் செயலக ஓய்வு பெற்ற அலுவலர்கள் சங்கம்.
மேடவாக்கம் டேங்க் சாலை, கீழ்பாக்கம், சென்னை– 10.
தலைவர், அனைத்திந்திய ஓய்வுபெற்றோர் சங்கக் கூட்டமைப்பு,
மேற்கு சைதாப்பேட்டை, சென்னை–15.
தலைவர், ஓய்வுபெற்ற ஆசிரியர் சங்கம், எண்–12, அபயாம்பாள்புரம், மயிலாடுதுறை,
நாகப்பட்டினம் மாவட்டம்.
மாநிலத் தலைவர், அகில பாரத குடிமை பெற்றோர் மற்றும் ஓய்வூதியர் அமைப்பு,
எண்–7, பாரதிதாசன் சாலை, அவினாசி, கோயம்புத்தூர் மாவட்டம்.
தலைவர், இந்திய அதிகாரிகள் சங்கம், எண் 35, திருவி.க.நெடுஞ்சாலை,
இராயப்பேட்டை, சென்னை–14.
தலைவர், தமிழ்நாடு முதியோர் குடியுரிமை பெற்றோர் சங்கம்,
எண்–வி 95,அண்ணா நகர், சென்னை–40.
தலைவர், தமிழ்நாடு முதுநிலை குடியுரிமை பெற்றோர் மற்றும் ஓய்வூதியர்கள்
சங்கம், எண் 38–பி, பிரதான சாலை, பெருமாள்புரம், திருநெல்வேலி.
தலைவர், ஓய்வுபெற்ற அலுவலர் சங்கம், எண் 158, பெல்ஸ் சாலை, சென்னை–5.
நிதித்துறை முதன்மை செயலாளரின் தனிச் செயலாளர், சென்னை–9.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்

/ ஆணைப்படி அனுப்பப்படுகிறது /

பிரிவு அலுவலர்.